**19.03.2025 MCOP. No.569/21** பெயர். **திருமதி.கனகவள்ளி PW** 1

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

ஏற்கனவே விபத்தில் இறந்த மலையப்பன் எனக்கு மாமனார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மலையப்பனுக்கு திருமணமாகி அவருக்கு பிள்ளைகள் உள்ளது. அவரது மகன் பெயர் முருகன். முருகனுக்கு மனைவி நான்தான். நான் தான் முருகனின் மனைவி என்பதற்கு எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆதார் கார்டு, வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். முருகன் எந்த வருடம் இறந்தார் என்றால் 1995ல் இறந்துவிட்டார். சிவக்குமார் என்பவர் எனது பெரிய மகன். வெற்றி செல்வி எனது மகள். நடராஜன் எனது சின்ன மகன். சிவக்குமார், வெற்றி செல்வி ஆகியோருக்கு திருமணமாகிவிட்டது. விபத்தில் இறந்த மலையப்பனுக்கு பிரேத விசாரணை அறிக்கை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. விபத்தில் மலையப்பனுக்கு இறந்தபோது வயது 82 என்றால் அந்த வயது இருக்காது என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார். பிரேத அறிக்கை வழங்கியவர் மலையப்பனுக்கு வயது 82 என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு இழப்பீடு அதிகம் வழங்க வேண்டும் என்பதற்காக பிரேத விசாரணை அறிக்கை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. மலையப்பன் மாத வருமானம் ரூ.15 ஆயிரம் வருமானம் ஈட்டி வந்தார் என்பதற்கு ஆவணங்கள் தாககல் செய்யவில்லை என்றால் சரிதான். மலையப்பனை பஸ் ஏற ரோட்டை கடக்கும்போது தடுமாறி கீழே விழுந்து தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மலையப்பனை இருசக்கர வாகனத்தில் வைத்து ஓட்டி சென்றது அவரது பேரன் மைனர் என்பதால் இழப்பீடு கிடைக்காது. அவர் நடந்து சென்றதாக சாட்சி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறார். மலையப்பனை அவரது பேரன் இருசக்கர வாகனத்தில் வைத்து ஓட்டி சென்ற விவரம் ம.சா.ஆ,1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகன ஓட்டுநர் கணேசன் தான் இழப்பீடு கொடுகக வேண்டும் என்றும் 2ம் எதிர்மனுதாரா ் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும் அதற்கு அடிப்படை ஆதரவு இல்லை என்றால் சரியல்ல.

**Taken down by me in open court read over to the witnesses and admitted by him/her to be correct.**

**Addl. District Judge/Presiding Officer,**
**Spl.Court for EC/NDPS Act case,**
**Pudukkottai.**